**நவம்பர் - 4**

**"அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி (புகழ்ச்சியை நாடாமல்) அடிமையின் ரூபமெடுத்தார்." - பிலி 2 . 7.**

இரண்டு எஜமான்களுடைய சிரத்தைகள் ஒன்றுக்கொன்று விரோதமானவைகளாயிருக்கிறதினால், எந்த மனிதனும் இருவருக்கும் ஊழியஞ் செய்யக் கூடாதவனாயிருக்கிறான். இருவரையும் திருப்தி பண்ணக் கூடாதவனாயிருக்கிறான். இருவருக்கும் நியாயஞ்செய்ய கூடாதவனுமாயிருக்கிறான். அதுபோலவே, நாமும் தேவனைப் பிரியப்படுத்தவும், தேவனுக்கும் நீதிக்கும் ஊழியஞ் செய்யவும், அதே சமயத்தில் தற்கால நேகமத்தை இப்பொழுது ஆளுகிறவனும், இந்த உலகத்தின் அதிபதியுமான எதிராளியானவனுக்கும் அவனோடு இணக்கமாக இருக்கிறவர்களுக்கும், பிரியமானவர்களாயிருக்க முடியாது. தேவனுக்குப் பிரதிஷ்டை செய்த, பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிற, தேவனிடத்தில் ஐசுவரியவான்களுமாயிருக்கிற அனைவரும், பிரதிஷ்டை செய்யாதவர்களிடத்திலும், எந்த உத்தியோகத்திலிருந்தாலும், உண்மையில் உலகப் பொருள்களுக்கும், சுயநலத்திற்கும், இப்பொழுதிருக்கிற வாழ்க்கைக்கும் ஊழியஞ்செய்து ராஜ்ஜியத்தை அடைவதற்காக இந்தத் தங்களுடைய விருப்பங்களை, சிரத்தைகளை தியாகஞ் செய்யாமலிருக்கிறவர்களிடமும் ஒரு புகழையும் பெற விருப்பக்கூடாது. **- Z 00, 318 (R 2715).**

இந்த வசனமும், இதற்கு முந்தின பிந்தின வசனங்களும் சரியானபடி மொழிபெயர்க்கப்பட்டால், யேசு சர்வ வல்லமையுள்ள தேவன் அல்ல என்று மாத்திரமல்லாமல், ஆனால் ஒரு மனிதனாவதற்காக, அவர் மானிட சுபாவத்திற்கு முந்தின தன்னுடைய சுபாவத்தையும் உத்தியோகத்தையும் விட்டுவிட்டார் என்றும் காட்டுகிற வேதகாமத்திலுள்ள பலமான அத்தாட்சிகளில் இடம் பெறுகின்றன. ஆகையால் இவ்வுலகில் இருக்கும் பொழுது அவர் ஒரு தேவனும், மனிதனுமாக இருக்கவில்லை. ஆனால் , ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கு முன்பு, அவர் பாவமில்லாத ஒரு பூரண மனிதனாக மாத்திரம் இருந்தார். சரியானபடி மொழிபெயர்க்கப்பட்ட, "அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார்." என்ற பாகம், அவர் மனிதனாவதற்கு முந்திய சுபாவத்தையும், உத்தியோகத்தையும் அவைகளோடு சேர்ந்த மகிமையையும் அவர் விட்டுவிட்டதைக் குறிக்கிறது. "மனுஷர் சாயலானார்." என்பது அவர் மானிட சுபாவத்தை எடுத்துக் கொண்டதைக் குறிக்கிறது. இவ்விதமாக அவர், சுபாவத்திலும் தன்மையிலும் பிதாவாகிய ஆதாமுக்கு சரியாக எவ்விதத்திலும், சமமானவர். இது, ஆதாமுக்காகவும் அவனுடைய சந்ததிக்காகவும் அவர் மீட்கும் பொருளாவதற்கு சாத்தியமாக்கிற்று. **- P 26, 156, 157.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோவா 1.14; 2கொரி 8.9; எபி 2.9-18; ரோம 5.18,19; ஏசா 42.1, 52.13-15, 53.11; மத் 20.27,28; லூக் 22.27; யோவா 13.14.**

**கோபுர வாசிப்பு : Z 16, 35 (R 5842).**

**வினாக்கள் : கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கியது இந்த வாரத்தில் என்னில் என்ன பலன் செய்தது? எப்படி? பலன் என்ன?**